# சென்னையின் போக்குவரத்து மையமாக மெட்ரோ திகழும்

## பிரதமர் மோடி பேச்சு

சென்னை, பிப்.14-

மெட்ரோ ரயில் சேவை விரிவாக்கத்தின் மூலம், போக்குவரத்தின் முக்கிய மையமாக சென்னையின் முக்கிய போக்குவரத்து மையமாக மெட்ரோ ரயில் சேவை திகழும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

உரையின் தொடக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி வணக்கம், வணக்கம் சென்னை, வணக்கம் தமிழ்நாடு என்று தெரிவித்து தனது உரையை தொடங்கினார். சென்னையில் நேரு உள்விளையாட்டு அரங்கில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இன்று முக்கிய திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுகிறது. இவை இந்திய மற்றும் தமிழக வளர்ச்சிக்கு உதவும். தமிழகத்தில் கல்லணையில் 636 கிமீ தூரத்துக்கு கல்லணை கால்வாய் திட்டம் புதுப்பிக்க அடிக்கல் நாட்டப்படுகிறது. இதன் மூலம் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களை சேர்ந்த 2.27 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறும். ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் இந்த கல்லணையை பயன்படுத்த விவசாய உற்பத்தியை பெருக்கிவரும் தமிழக விவசாயிகளை நான் பாராட்டுகிறேன். நீராதாரம் முக்கியம் என்பதை அவ்வையார் தனது பாடலில் சிறப்பித்துள்ளார். அதனால் ஒவ்வொரு துளி நீரும் முக்கியமானது. அதை நாம் சேமிக்க வேண்டும். இது எதிர்காலத்துக்கு உதவும். நீர் ஆதாரம் என்பது உலகளாவிய பிரச்னையாக உள்ளது.

அடுத்தபடியாக வண்ணாரப்பேட்டையில் இருந்து விம்கோ நகர் வரையில் 9.05 கிமீ தூரம் கொண்ட சென்னை மெட்ரோ முதல் கட்ட திட்டம். இந்த திட்டம் இந்திய பொறியாளர்களால் செயல்படுத்தப்பட்டுள்ளது. மெட்ரோவின் அடுத்ததாக இரண்டாம் கட்ட திட்டம் 119 கிமீ தூரத்துக்கு செயல்படுத்தப்படும். இதற்காக ரூ. 63 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்னை போக்குவரத்தின் முக்கிய மையமாக இருக்கும். மேலும் விழுப்புரம்-தஞ்சாவூர் இடையே ரயில் திட்டம் என்பது டெல்டா பகுதிய சேர்ந்த விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக அவர்கள் தங்கள் விளை பொருட்களை எளிதாக எடுத்து செல்ல முடியும்.

உலகின் மிகப் பழமையான மொழியாக தமிழ் மொழி உள்ளது. அந்த மொழியில் தான் பாரதியார், ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் என்று கூறி ஆயுதங்கள், கப்பல்கள், உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்ய வேண்டும் என்று கூறுகிறார். அதன்படி இந்தியாவில் ரூ.8100 கோடி செலவில் இந்திய தயாரிப்பான அர்ஜூன் மார்க் 1ஏ பீரங்கியை நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். தமிழகம் ஏற்கெனவே தானியங்கியில் முக்கிய இடத்தில் உள்ளது தெரியும். நமது ராணுவ சக்தி என்பது அமைதியை நிலைநாட்டும் வகையில் இருக்கிறது. அதே நேரத்தில் நமது பாதுகாப்புக்கும் உறுதியாக இருக்கிறது.

தமிழகத்தில் 2 லட்சம் சதுர பரப்பளவில் ஐஐடி வளாகம் அமைக்கப்படுகிறது. இங்கு புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்படும். உலக அளவிலான அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன.

இந்திய நாடு உலகமே பாராட்டு வகையில் உள்ளது, அதற்கு காரணம் நமது நாட்டில் உள்ள 130 கோடி மக்களின் உழைப்பு, உயர்வுதான்.

அதனால் அனைத்து வகைகளிலும் நமது நாடு பிறருக்கு உதவிகளை வழங்க தயாராக இருக்கிறது. இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் நமது நாட்டின் வளர்ச்சிக்கும் உள்கட்டமைப்புக்கும் அதிக வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் வளர்ச்சிக்கு கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடல் பாசி உற்பத்திக்கு பன்நோக்கு பூங்கா அமைக்கவும், இரண்டு மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கவும் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து கிராமங்களுக்கும் மின் வசதி கொண்டு வரவும், இணை வசதிகள் கொண்டு வரவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவேந்திர குலவேளாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இந்த அரசு அவர்களை தேவேந்திர குல வேலாளர்கள் என்று அழைக்கும் வகையில் இந்திய அரசிதழில் வெளியிடவும், வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இது குறித்து விவதிக்கவும் ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் அவர்கள் 6 முதல் 7 வகையான பெயர்களில் அழைக்கப்பட மாட்டார்கள். இலங்கை தமிழர்களின் நலனில் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. வடகிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு வீடுகள் கட்டித்தரவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.